# அலகு – 5

# TT0205 மொழி கற்றல் வளமூலங்கள்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியரின் அறிவை விரிவுப்படுத்தும் களன்களான நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம், தமிழ் கற்பிப்பதற்கான பார்வைநூல்கள், திறனாய்வு நூல்கள், கட்டுரை, கருத்தரங்கம், பயிலரங்கம், வலைத்தளங்கள் ஆகியவற்றைப் பற்றி விளக்குவது இந்த அலகின் நோக்கமாகும்.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம் ஆகியவற்றின் பயன்பாட்டை தெரிந்து கொள்ளலாம்.
- தமிழ் கற்பிப்பதற்கான பார்வை நூல்கள் பட்டியலை அறியலாம்.
- திறனாய்வு மற்றும் கட்டுரைகளில் மொழிப்பயன்படும் விதத்தினைத் தெரிந்து கொள்ளலாம்.
- கருத்தரங்கம் மற்றும் பயிலரங்கம் ஆகியவற்றின் அமைப்பை விளங்கி கொள்ளலாம்.
- வலைத்தளங்கள், மின் அகராதி, வலைப்பூக்கள் முதலியனவற்றின் மூலம் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

## பாட அமைப்பு


| | பாட அமைப்பு |
|---|---|
| **5.0** | **பாட முன்னுரை** |
| **5.1** | **நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம்** |
| 5.1.1 | நிகண்டுகள் |
| 5.1.2 | அகராதிகள் |
| 5.1.3 | கலைக் களஞ்சியங்கள் |
| **5.2** | **தமிழ் கற்பிப்பதற்கான பார்வை நூல்கள்** |
| 5.2.1 | தமிழ்ச் சொற்களஞ்சியம் (Tamil Lexicon) |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **5.3** | **திறனாய்வு நூல்களும் கட்டுரைகளும்** |
| 5.3.1 | மொழி வளர்ச்சி அமைப்புகள் |
| 5.3.2 | அரசு அமைப்புகள் |
| 5.3.3 | தனியார் அமைப்புகள் |
| **5.4** | **கருத்தரங்கம், பயிலரங்கம்** |
| 5.4.1 | கருத்தரங்கம் |
| 5.4.2 | பயிலரங்கம் |
| **5.5** | **வலைத்தளங்கள் (மின் அகராதி, வலைப்பூக்கள்....)** |
| 5.5.1 | மின் நூலகம் |
| 5.5.2 | வலைப்பூக்கள் – வலைப்பதிவு |
| 5.5.3 | தமிழ் வலைப்பூக்கள் வளர்ச்சி |
| **5.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 5.0 பாட முன்னுரை

### பாட முன்னுரை

இந்த அலகில் நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம், தமிழ் கற்பிப்பதற்கான பார்வை நூல்கள், திறனாய்வு நூல்கள், கட்டுரை, கருத்தரங்கம், பயிலரங்கம், வலைத்தளங்கள் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆசிரியர் பயிற்றுநர்கள் இத்தகைய அறிவை பெற்றால் மட்டுமே கற்பித்தலைச் சிறப்பாக்க முடியும்.

## 5.1 நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம்

### நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம்

இந்தப் பகுதியில் நிகண்டுகள், அகராதிகள் மற்றும் கலைக்களஞ்சியம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

### 5.1.1 நிகண்டுகள்

'தமிழ்மொழியில் அகராதியே இல்லை' என்னும் தவறான கருத்து பரப்பப்பட்டுள்ளதோடு, அகராதி இல்லாக் குறையைப் போக்கச் 'சதுரகராதி' எழுதப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர்.

'அகராதி' எனும் சொல் 'அகரத்தை, ஆதியாகக் கொண்ட நூல்' எனும் பொருள்படும் ஆங்கிலச் சொல்லான 'Dictionary' என்பதற்கு இணையாகத் தமிழில் ஆக்கப்பட்ட சொல். இச்சொல் தமிழில் ஆக்கப்பட்டிருப்பினும், இச்சொல்லின் பின்பகுதியான 'ஆதி' என்பது வடசொல் சார்பானது எனக் கருதி, அகராதி என்னும் சொல்லுக்கு இணையாக அகராதி 'அகரமுதலி' எனும் சொல் ஆக்கப்பட்டுள்ளது. அகரத்தை முதலாகக் கொண்டு, மொழியிலுள்ள சொற்களைத் தொகுத்துப் பொருள் தரும் போக்கில் நூல்கள் அக்காலத்தில் இல்லையெனினும், சொற்களைப் பல்வேறு வகைக்குள் உட்படுத்தி அவற்றிற்குப் பொருளைப் பாடல் வடிவில் தந்த நூல்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தொடங்கி, 'நிகண்டுகள்' எனும் பெயரில் தமிழில் எழுந்துள்ளன. அறியப்படும் நிகண்டுகளில் முதல் நூல் சேந்தன் திவாகரம். இதனுள் "தெய்வப் பெயர்த் தொகுதி' முதலாக, 'பல்பொருள் கூட்டத்து

தொகுதிகள் உள்ளன. இவற்றுள் ஏறக்குறைய 9500 சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

பிற நிகண்டுகளும் பெரும்பகுதி திவாகரத்தை யொட்டியும் சிறுபகுதி மாறுபட்டும் உள்ளன. நிகண்டுகளுள் தலை சிறந்ததாகக் கி.பி. 15ஆம் நூற்றாண்டினரான மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டைக் குறிப்பர்.

### 5.1.2 அகராதிகள்

நிகண்டுகளைப் போலப் பிற்காலத்தில் தோன்றி வளர்ச்சி பெற்றது அகராதியாகும். தமிழில் தோன்றிய முதல் அகராதி சதுரகராதி என்பர். 1670ஆம் ஆண்டில் ஆந்தம் தெ. பிரோயன் என்பவர் தமிழ் போர்ச்சுக்கீசிய அகராதியை வெளியிட்டார் (இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, கையேடு – ப. 53) எனவும் அறிய முடிகிறது.

1732ஆம் ஆண்டு பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் சதுரகராதியை வெளியிட்டுள்ளார். 'சதுர்' என்பது நான்கு என்னும் பொருள் தரும் சொல். சதுரகராதியில் பெயர், பொருள், தொகை, தொடை என நால்வகைச் சொற்களுக்குத் தனித்தனியாகப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளதால் அது சதுரகராதி எனப்பட்டது. இதில் 12 ஆயிரம் சொற்களுக்கு மேல் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

சதுரகராதிக்குப் பின்னர் வீரமாமுனிவரால், 'தமிழ் இலத்தீன் அகராதி', 'இலத்தீன் – தமிழ் அகராதி', 'தமிழ் பிரெஞ்சு', 'தமிழ் – ஆங்கிலம்', 'போர்ச்சுக்கீசியம் – இலத்தீன் 'தமிழ்', 'வட்டார வழக்கு அகராதி' ஆகியனவும் தொகுக்கப் பெற்றன. பின்னர், 'தமிழ் – ஆங்கிலம்', 'ஆங்கிலம் – தமிழ் அகராதிகளும் பெருமளவில் வெளிவந்தன. 1842இல் தமிழ் தமிழ் அகராதி முதன் முதலில் வெளியிடப்பட்டது. அறுபதினாயிரம் சொற்கள் இடம்பெற்றுள்ள அந்த அகராதி, ஸ்பால்டிங் என்னும் பாதிரியாரால் தொகுத்து வெளியிடப்பட்டது. தொடர்ந்து 1883இல் விசயரங்க முதலியார் என்பவரால் தமிழ் – தமிழ் மாணவர் அகராதி வெளியிடப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ன் தொடக்கத்தில் நா. கதிரைவேற்பிள்ளை அகராதி வெளிவந்தது. தொடர்ந்து பல அகராதிகள் வெளிவந்தாலும் தற்போது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சாந்தா பப்ளிஷர்ஸ், மணிவாசகர் நூலகம், க்ரியா போன்ற பதிப்பகங்கள் வெளியிட்டுள்ள அகராதிகளே கிடைக்கின்றன. இவ்வகராதிகளின் ஒன்றோ, பலவோ தமிழாசிரியருக்கு உதவும் பொதுப் பார்வை நூல்களாகும்.

தமிழ் – தமிழ் அகராதிகள் மூலம் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய சொற்களுக்குப் பொருள்களையும், சொல் இணக்கத்தையும் தெளிவாக அறிய முடியும்.

### 5.1.3 கலைக் களஞ்சியங்கள்

இவை தமிழாசிரியருக்கு மிகச் சிறந்த செய்திகளைத் தரவல்லன. தமிழில் பெருமளவிலான கலைக் களஞ்சியங்கள் வெளிவரவில்லை. ஆங்கில மொழியில் ஒவ்வொரு துறைக்கும் கலைக் களஞ்சியங்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழில் வெளியிடப்பட்டுள்ள கலைக் களஞ்சியங்களைப் பார்ப்பவரின் எண்ணிக்கை மிகக் குறைவு. அபிதான சிந்தாமணி, அபிதான கோசம் என்பனவும் தமிழாசிரியருக்குப் பயன் தரக்கூடிய கலைக் களஞ்சிய வகைகளாகும்.

- **தமிழ்க் கலைக் களஞ்சியம்**

தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தமிழ்க் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டது. 10ஆவது தொகுதி 1968ஆம் ஆண்டும், பிற தொகுதிகள் அவ்வாண்டுக்கு முன்னரும் வெளியிடப்பட்டன. அகர வரிசையில் சிறப்பு வாய்ந்த பல்வேறு பெயர்கள், பண்புகள், நிகழ்ச்சிகள் பற்றிய விரிவான விளக்கங்களைக் கலைக் களஞ்சியம் தருகிறது.

**எ.கா :**

சீகன் பால்க் (Ziegenbalg 1683 – 1719)

டேனிஷ் மிஷனைச் சேர்ந்த ஜெர்மானியப் பாதிரி : லியூசேயாவில் (Lusatia) 1683இல் பிறந்தார். டென்மார்க் நாட்டு மன்னர் ஆணையின் பெயரில் இவர் 1706இல் இந்தியாவுக்கு வந்து 1714 வரை தங்கியிருந்தார். மீண்டும் 1716 இல் இந்தியாவுக்கு வந்து 1719இல் தரங்கம்பாடியில் காலமானார். இவர் தமிழ் இலக்கணம் (Grammatical Tamulica) ஒன்றை வெளியிட்டார். கிறித்துவ வேத நூலாகிய பைபிளை இவரும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பார்க்க : பைபிள் 7–64.

இதுபோன்றே சான்றோர்கள், இலக்கியங்கள், வரலாற்று நிகழ்ச்சிகள் போன்றன பற்றியும் அரிய தகவல்களை விளக்கமாகத் தரும் கலைக்களஞ்சியத் தொகுதிகள் தமிழாசிரியர்களுக்குரிய சிறந்த பார்வை நூல்களாகும்.

தமிழாசிரியர், தேவைக்கேற்ப பல கலைக் களஞ்சியங்களைப் படித்து அரிய தகவல்களை மாணவர்களுக்குக் கூற வேண்டும். கலைக் களஞ்சியத்துள் அரிய படங்களும் இடம் பெற்றுள்ளன. அவற்றையும் கற்பிப்பில் பயன்படுத்தலாம்.

- **அபிதான சிந்தாமணி**

தனி ஒருவரின் அரிய முயற்சியால் 1910ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்க் களஞ்சியம் அபிதான சிந்தாமணி. இதைப் படைத்து வெளியிட்டவர் பெருமைக்குரிய ஆ. சிங்கார வேலு முதலியார்.* 1600க்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இந்நூல், தமிழாசிரியர்கள் ஒவ்வொருவரும் கைக் கொண்டிருக்க வேண்டிய தகவல் பெட்டகமாகும்.

அபிதான சிந்தாமணியின் முதற் பதிப்பின் முன்னுரையில் ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் கீழ்வரும் செய்தியைத் தருகிறார்.

Gentlemen and lovers of Tamil Literature.

I began to write this Abittana Chinthamani the Encyclopaedia of Tamil Literature some twenty years ago. For the materials of this book, I went to several places in Madras Presidencey and secured the needed information. This book does not treat a single subject but treats of many. It contains among other things.

1. Biographical sketches of dieties, saints and illustrious personages.
2. Description and explanattory notes on places of sanctity anna and antiquity.
3. Explanation of illusions to Hindu mythology.
4. Grammar, Literature and Logic.
5. Generalogical, Geographical and Historical facts.
6. Description of different systems of philosophy and religion.
7. Description of the birth and growth of the Hindu sects and creeds that are Estimate.
8. Genealogy of the principal characters that figure in our Mythology.
9. Origin of precious stones.
10. Physiognomy, Astrology and Medicine.
11. History of illustrious Tamil Authors and Madathipathis.

தந்தை பெரியார் அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்பில் அபிதான சிந்தாமணி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பரந்துபட்ட அறிவு வேட்கைக்குப் பெருமளவில் ஈடுகொடுத்த நூல் அபிதான சிந்தாமணி என இதன் அருமை

பெருமைகளை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு குழுவின் இடையறாப் பணியால்தான் கலைக் களஞ்சியம் வெளிவர இயலும். ஆனால் அபிதான சிந்தாமணி ஆ. சிங்காரவேலு முதலியார் எனும் தமிழாசிரியர் ஒருவரால் 20 ஆண்டு உழைப்பால் 1910ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

இதனுள் அகத்தியர் தொடங்கி வௌவால்வரை பல்வேறு செய்திகள் அரிய முறையில் கூறப்படுகின்றன.

### அபிதான சிந்தாமணி குறிப்புகளுள் ஒன்று அட்ட வசுக்கள்

அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷன், பரபாசன் முதலியோர். இவர்கள் பிரமன் புத்திரர்கள் எனவும் தக்ஷன் குமாரிகளாகிய பதின்மரில் வசு என்பவளுக்குப் பிறந்தார்கள் எனவும் கூறுவர்.

- **உரைநூல்கள்**

சங்க காலத்திலும், அதற்கு முன்பும் தமிழ் உரைநடை எவ்வாறு இருந்தது என்பதனை நாம் அறிய முடியவில்லை. இலக்கண, இலக்கிய நூல்களும், சமய நூல்களும் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன. தமிழ் மொழி இலக்கிய வளம் மிகுந்தது. இலக்கண வரம்புடன் காலந்தோறும் வளர்ந்து வரும் இயல்புடையது. இலக்கண, இலக்கிய வளங்களைப் பெற்றிருப்பது போலவே நல்ல உரை நூல்களையும் பெற்றிருக்கிறது. இந்நூல்களைக் கற்றறிந்தவர் அந்நூலின் நுட்பங்களைக் கூறி வந்தனர். இவ்வாறு வாய்மொழியாகப் பல தலைமுறைகளாக வளர்ந்து வந்த உரை விளக்கத்தைச் சிலர் ஏடுகளில் எழுதி வைக்கத் தொடங்கினர். இலக்கியங்களைப் போலவே என்றும் அழியாத சிறப்புடைய உரைகளைப் படைத்து உரையாசிரியர் பலர். தமிழ் மொழியும், இலக்கியமும் உரையாசிரியர்கள் எழுதிய உரைகளால் வளர்ந்துள்ளன. தமிழ் உரைநடை வளர்ச்சி மட்டுமன்றித் தமிழ் மொழி, பண்பாடு, நாகரிகம் முதலிய அனைத்தையும் நமக்குக் காட்டுவதாக உள்ளது.

வளமிக்க தமிழ் இலக்கியங்களுக்குச் சுவைமிக்க எண்ணற்ற திறனாய்வு நூல்கள் எழுந்துள்ளன. பல்வேறு இலக்கியக் கொள்கைகளுக்கேற்பவும் தங்கள் இலக்கியப் பார்வைகளுக்கு ஏற்பவும் தமிழ் இலக்கியங்களில் தோய்ந்த அறிஞர்கள் விளக்கங்களையும் திறனாய்வுகளையும் தந்துள்ளனர்.

திருக்குறள், சங்கத் தொகை நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம், நாலடியார் போன்றனவும் பிறவும்

தொடக்க வகுப்புகளிலிருந்து பட்ட வகுப்புகள்வரை கற்பிக்கப்படும் இலக்கியங்களாகும். இவற்றைக் குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் கற்பிப்பதற்கு மூல நூல்கள் மட்டும் போதா. உரை விளக்கங்கள், திறனாய்வுகள் போன்றவற்றை ஆசிரியர் படித்தால்தான் அவ்விலக்கியங்கள் பற்றித் தெளிவான, விரிவான, ஆழமான கருத்துகளைக் கற்பவர் உள்ளத்தில் பதிக்கவியலும்.

இன்றைய நடைமுறையில் எல்லா நிலைகளிலும் வினா விடைகளைத் தாங்கிய பாடநூல் உரைகளை மட்டுமே மாணவர்கள் படிக்கிறார்கள். அவற்றைப் படிப்பதை ஆசிரியர்களும் ஊக்கப்படுத்துகிறார்கள். விரும்பத்தகாத இந்நடைமுறை கற்பிப்புச் சூழல் களைந்தெறியப்பட வேண்டும். ஆசிரியர் மாணவர்களுக்கு இலக்கியக் கருத்துகளை அள்ளித்தரும் 'அமுதசுரபி'யாகத் திகழ வேண்டும்; கருத்தூட்டம் தரும் 'கல்வியாளர்'களாக விளங்க வேண்டும்; ஈர்க்கும் தன்மையராய் மாணவர் இதயங்களில் இடம் பிடித்தல் வேண்டும். இந்நிலையை எய்திடப் பெரிதும் உதவுவது திறனாய்வு நூல்களே. பாட உரை நூல்கள் படிப்பதை விடுத்து, தினறாய்வு நூல்களை ஆசிரியர்கள் படிக்கத் தொடங்கினால் இலக்கியக் கற்பிப்புச் செழுமையுறும். இல்லையாயின் ஆசிரியர்கள் தகவல் அறிவிப்பாளராகக் காணப்படுவர்.

திறனாய்வு நூல்களைப் படிக்க, ஆசிரியர் நூலகத்தின் துணையை நாட வேண்டும். தமிழகத்தில் அனைத்து வட்டத் தலைநகர்களிலும் தேவநேயப் பாவாணர் நூலகத்தின் கிளைகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலான திறனாய்வு நூல்கள் வாங்கப்படுகின்றன. அந்நூலகங்களை ஆசிரியர்கள் பயன்படுத்தலாம். பள்ளி நூலகத்தையும் திறனாய்வு நூல்கள் கொண்டு வளப்படுத்திக் கற்பிப்புப் பணியை மேம்படுத்தலாம். உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்கு ஆண்டு தோறும் நூல்கள் வாங்கி அரசு நிதி உதவி வழங்கி வருகிறது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளி நூலகங்களோடு அலுவலக முறையில் தொடர்பு கொண்டு, அப்பள்ளிகளின் நூலகங்களைப் பயன்படுத்த இயலும்.

பொதுவாக, ஆசிரியர்கள் தத்தம் பள்ளியிலேயே தங்கள் பணித் தொடர்புகளை முடக்கிக் கொள்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும். பல்வேறு பள்ளிகளிலும் கற்பிப்புத் தொடர்புகளை ஆசிரியர்கள் பெருக்கிக் கொள்வார்களாயின், பார்வை நூல் பயன்பாடுகளும் பெருகும். பரந்துபட்ட அறிவும் வளரும்.

## 5.2 தமிழ் கற்பிப்பதற்கான பார்வை நூல்கள்

### தமிழ் கற்பிப்பதற்கான பார்வை நூல்கள்

ஆசிரியர் கற்பிக்கப்புகும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகச் சிறப்பு, மிகைத் தகவல்களைத் தரும் நூல்கள் சிறப்புப் பார்வை நூல்கள் ஆகும். அவையனைத்தையும் பட்டியலிடுதல் இயலாது. மிகுதியும் பயன்படத்தக்க நூல்கள் கீழே பட்டியலிப்பட்டுள்ளன.

| நூல் தலைப்பு இலக்கியம் | பதிப்பகம் |
|---|---|
| சங்க இலக்கியப் பேழை (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) திருக்குறள், பதினெண்கீழக்கணக்கு ஆகியன அடங்கிய பேழை) | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் |
| திருக்குறள் பரிமேலழகர் உரையும் குறிப்புரையும் | வசந்தா பதிப்பகம் |
| கம்பராமாயணம் – 6 தொகுதிகள் | வை.மு.கோ. பதிப்பகம் |
| தமிழ்நீதிச் செல்வம் | சாந்தா பப்ளிஷர்ஸ் |
| செம்மொழிக் கல்வி (தமிழ்) | பி. இரத்தினசபாபதி சாந்தா பப்ளிஷர்ஸ் |
| இலக்கணம் : இலக்கண விளக்கம் | இராச கோபாலச்சாரி ஸ்டார் பிரசுரம் |
| தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் | மணிவாசகம் நூலகம் |
| நன்னூல் | சை.சி.நூ.ப. கழகம் |

### 5.2.1 தமிழ்ச் சொற்களஞ்சியம் (Tamil Lexicon)

1862ஆம் ஆண்டு வின்ஸ்லோ அவர்கள் தொகுத்த தமிழ் ஆங்கில அகராதியை மேலும் மேம்படுத்தித் தமிழ்ச் சொற்களஞ்சியமாக வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை டாக்டர் ஜி.யு. போப் அவர்களாலும் சர். பெர்டரிக் நிக்கல்சன் என்பவராலும் 1905ஆம் ஆண்டு வலியுறுத்தப்பட்டது. டாக்டர் போப் அவர்கள் தமிழ்ச் சொற்களைத் திரட்டி அவற்றிற்கு மொழியியல் அடிப்படையிலான விளக்கங்களைப் பெருமளவில் தயாரித்திருக்கிறார். 1907ஆம் ஆண்டு அவர் இயற்கையெய்தியமையால் தமிழ்ச் சொற்களஞ்சியப் பணியில் தேக்கம் ஏற்பட்டது. பின்னர் 1911ஆம் ஆண்டு அப்பணி சென்னை அரசாலும், பல்கலைக் கழகத்தாலும் புத்துயிர் பெற்றது. பல்வேறு தடைகளைத் தாண்டி இப்பணி 1935ஆம் ஆண்டு நிறைவு பெற்று ஆறு தொகுதிகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தால் தமிழ்ச் சொற்களஞ்சியம் வெளியிடப்பட்டது. அப்போது

அவற்றின் பதிப்பாசிரியராகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் பணியாற்றினார். இவர் நான்காவது பதிப்பாசிரியராவார். இவருக்கு முன்னர் பதிப்பாசிரியர்களாகப் பணியாற்றியவர் மூவர். 1921ஆம் ஆண்டுவரை ஜெ.எஸ். சாண்டலர், 1926ஆம் ஆண்டுவரை அனந்த விநாயகம் பிள்ளை, 1926ஆம் ஆண்டுவரை சி.பி. வெங்கட்ராமன் என மூவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கு முன்னர் தமிழ்ச் சொற்களஞ்சியம் பதிப்பாசிரியராகப் பணியாற்றியுள்ளனர்.

தமிழ்ச் சொற்களஞ்சியத் தொகுதிகள் 25 ஆண்டு காலப் பணியால் வெளிவந்தனவாகும். அவற்றிற்குப் பங்களித்த அறிஞர்கள் பலர். பணியைத் தொடங்கி வைத்தவர் டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் தயாரித்த பல குறிப்புகள் அவற்றுள் இடம் பெற்றுள்ளன. 'லெக்சிகன்' என வழங்கப்பெறும் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் தமிழ்ச் சொற்களுக்குக் கீழ்க்கண்டவாறு விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

1. சொல், 2. சொல்லின் ஆங்கில ஒலிபெயர்ப்பு 3. இலக்கணப் பாகுபாடு 4. சொல்தோற்றம் 5. இனச்சொற்கள் 6. சொற்பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும் 7. சொற்பொருளுக்கேற்ற இலக்கிய மேற்கோள். இவ்வேழு கூறுகளில் சில சொற்களுக்கு 4,5,7 என எண்ணிடப் பெற்ற கூறுகள் இடம் பெறா.

**எ.கா :**

(அரித்தல் எனும் சொல்லுக்குரிய லெக்சிகன் விளக்கம்)

அரித்தல் : air, v.intr. To have an acitite itching sensation; தினவெடுத்தல் – v.tr. To feed, browse or eat away; மேய்தல், மாலையை வேய்ந்தரிக்கு மிஞிறு (சீவக. 1769)? To sift, separate the larget from smaller bodies, with the hand, with a sieve or riddle; கொழித்தெடுத்தல். சல்லடையால் சலித்தல் அரிக்கிறான். 3. To sweep up, gather – கூட்டுதல், சருகரிக்க நேரமன்றிக் குளிர்காய நேரமில்லை. 4. To wash away by waves on the bank or shore; நீர் அறுத்துச் செல்லுதல். அரித்தொழுகும் வெள்ளருவி (தேவா. 283, 3) 5. To separate by washing; நீரில் கழுவிப் பிரித்தல். 6. To gnaw as by white anits; பூச்சி தின்னுதல், கணைச்சிதலரித்த (சிறுபாண். 133). 7. To vex by importuniry; இமிசித்தல். 8. To corrode, consume, as acids; துரு முதலியன தின்னுதல். (w) 9. To remove; நீக்குதல். (சீவக. 1769) 10. To create; படைத்தல். ஒங்குலகையரிந்து மளித்தும் 11. To intermit, inrerrupt; இடைவிடுதல் (அகநா.45).

மேற்கண்ட விளக்கத்தில் அரி–த்தல் எனும் சொல்லுக்குப் பதினொரு பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக, 1,04,405 தமிழ்ச் சொற்களுக்கு 6

தொகுதிகளாக உள்ள லெக்சிகனில் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தற்போது ஏழாம் தொகுதியும் வெளியிடப்பட்டுள்ளது.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. நிகண்டுகள் என்றால் என்ன?<br>2. அகராதிகள் அமைந்துள்ள விதத்தினைக் கூறுக.<br>3. கலைக்களஞ்சியம் பற்றி விரிவாக எழுதுக.<br>4. தமிழ் கற்பிப்பதற்கான பார்வை நூல்களைப் பயன்படுத்தும் விதம் குறித்து எழுதுக.<br>5. தமிழ்ச் சொற்களஞ்சிய பயன்பாட்டினை விளக்கி எழுதுக. |

## 5.3 திறனாய்வு நூல்களும் கட்டுரைகளும்

### திறனாய்வு நூல்களும் கட்டுரைகளும்

தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் தம்மை எப்போதும் தமிழ் வளர்ச்சிப் போக்கினை அறிந்தவராகத் திகழ வேண்டும்.

அரசு அமைப்பு, தனியார் அமைப்புகள் எனப் பல தமிழ் வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றி வருகின்றன. அவை ஆய்வகங்களை நடத்தியும் ஆய்வுகளையும் நிகழ்த்தியும் . வருகின்றன. ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்விதழ்களும் வெளிவருகின்றன. இவையெல்லாம் கற்பித்தலுக்கான வளமூலங்கள்.

### 5.3.1 மொழி வளர்ச்சி அமைப்புகள்

சங்ககாலம் தொடங்கி இந்நாள்வரை வளர்ச்சிக்கெனப் பல அமைப்புகள் இயங்கி வருகின்றன. இயக்கமுள்ள தமிழாசிரியர் தம்மை இவ்வமைப்புகளுள், ஒன்றுடனோ, பலவற்றுடனோ இணைத்துக் கொண்டால் தமிழ் உலகில் நிகழ்வனவற்றை அறிந்து கொள்வதோடு தம்மையும் வளர்ச்சிப் பணியில் உட்படுத்திக் கொள்ள இயலும். ஆசிரியர் · பெறும் வளர்ச்சி அவரோடு நின்றுவிடுவதில்லை. அவரை வழிகாட்டியாகக் கொண்ட மாணவர்களையும் வளர்க்கிறது. தமிழ்த்தொண்டின் தலையாயது, தமிழ் உணர்வு மிக்க தலை முறையினரை உருவாக்குதலாகும். எனவே, ஆசிரியர்கள் தமிழ் வளர்ச்சி அமைப்புகளை நாடிச் சென்று தங்கள் பணித்திறத்தை வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக்காக இயங்கும் அமைப்புகளை, அரசு அமைப்புகள், அரசு சார் அமைப்புகள், தனியார் அமைப்புகள் என வகைப்படுத்திக் காணலாம்.

### 5.3.2 அரசு அமைப்புகள்

அரசு அமைப்புகளாக, நடுவண் அரசுக்குரியதும் மாநில அரசுக்குரியதும் தமிழ் வளர்ச்சிக்காக இயங்கி வருகின்றன.

- **நடுவண் அரசு**

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் எனும் மொழி வளர்ச்சி நிறுவனம் மைசூரில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் இந்தி, வடமொழி (சமஸ்கிருதம்) ஆகியவை தவிர, பிறமொழிகளின் வளர்ச்சிக்குரிய பணிகளையும் செயல் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம் தொடங்கப்பெற்ற காலம் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மொழியியல் அறிஞர்கள் பணியாற்றியதால் இதன் பல பணிகள் செம்மொழியாம் தமிழ் வளர்ச்சி நோக்கில் அமைந்தன. தற்போதுங்கூட தமிழ்நாட்டைச் சார்ந்த முனைவர் பொன். சுப்பையா அவர்கள், மொழிக் கல்வியில் சிறப்பாக, தமிழ்க் கல்வியில் மேற்கொள்ளத்தக்க மதிப்பீட்டு முறைகள் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

பாடத்திட்ட அமைப்பு, தேர்வுமுறை, மொழி இலக்கியங்களால் விளையும் பண்பாட்டுப் பயன் ஆகியனவற்றின் தொடர்பானவை அவர் பொறுப்பேற்றுள்ள மதிப்பீட்டு முறைமத்தின் அளப்பரிய பணிகளாகும்.

இந்நிறுவனத்தில் இயக்குநராகவும் துணை இயக்குநராகவும் பணியாற்றிய முனைவர். இ. அண்ணாமலை, முனைவர். க. திருமலை ஆகியோரின் தமிழ் சார்ந்த மொழியியல் தொண்டுகள் பல.

அந்நிறுவனம், அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரைக்கும் தேவையான நூல்களை வெளியிட்டு வருகிறது. தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், மொழியில் வெளியாகும் நூல்களை வாங்கிப் பல நூலகங்களுக்கு இலவசமாக அனுப்புகிறது.

- **மாநில அரசு**

தமிழ்நாடு அரசின் பண்பாட்டுத் துறையின் மேற்பார்வையில் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ் வளர்ச்சிப் பணிக்கான பல்வேறு திட்டங்களைக் கொண்டுள்ளது. இவ்வியக்கம் அறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். இது சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நிதி உதவி வழங்குகிறது. அலுவலகங்களில் எல்லா நிலைகளிலும் தமிழ் பயன்படுவதை உறுதி செய்வதற்கான பணிகளையும் இது மேற்கொண்டு வருகிறது.

- **அரசு சார்பு அமைப்புகள்**

அரசு நேரடியாக ஈடுபடாமல், நிதி உதவி வழங்கி இயக்கும் அமைப்புகள் அரசுசார் அமைப்புகளாகும். தமிழ் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட அரசுசார் அமைப்புகள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழப் பல்கலைக்கழகம் ஆகியனவாகும்.

- **உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்**

சென்னை, தரமணியில் இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஏடுகளில் முடங்கிக் கிடக்கும் தமிழ் இலக்கியங்களை வெளியிடுதல், மொழி இலக்கிய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் போன்ற பணிகளை ஆற்றி வருகிறது. தமிழ் வளர்ச்சிகான செயல் திட்டங்களை (Projects) மேற்கொள்வோருக்கு நிதி உதவியும் இந்நிறுவனம் வழங்குகிறது.

- **தமிழ்ப் பல்கலைக் கழகம்**

தஞ்சாவூரில் அமைந்துள்ள தமிழ்ப்பல்கலைக் கழகம், எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகும். மொழி பெயர்ப்பு, சுவடி, மலைவாழ் மக்கள் முன்னேற்றம் போன்ற பல புலங்களைக் கொண்டியங்கும் இப்பல்கலைக் கழகம், தமிழ் வளர்ச்சிக்காகப் பல்முனைச் செயல்களை மேற்கொண்டு வருகிறது.

இப்பல்கலைக் கழகத்தின் ஓர் உறுப்பாக, தமிழ் இணையம் இயங்கி வருகிறது. பிற நாட்டிலுள்ளோர் தமிழ் கற்பதற்கான வளி வழி பாடங்களை (On Air) இந்நிறுவனம் உருவாக்கி அவற்றை இணையத்தின் வழியாக (Through Internet) அனுப்புகிறது.

- **பல்கலைக் கழக ஆய்வு மையங்கள் (Chairs)**

சென்னை போன்ற பல்கலைக் கழகங்களில் தமிழ் வளர்ச்சிக்காகத் தனி ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் ஆய்வு மையம், கிறித்துவ இலக்கிய ஆய்வு மையம், மதுரை செந்தமிழ்க் கல்லூரி போன்றன குறிப்பிடத்தக்க தமிழ் வளர்ச்சி வளர்ச்சி ஆய்வு மையங்களாகும்.

### 5.3.3 தனியார் அமைப்புகள்

தமிழ் வளர்ச்சிக்காக, செயலூக்கமும் தமிழ் ஆர்வமும் கொண்ட பலர், பல அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். தலைநகர் தமிழ்ச்சங்கம், நண்பர்கள் கழகம், மாணவர் மன்றம் போன்ற பல அமைப்புகள் தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தனியார் அமைப்புகளில் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் அரும்பணியாற்றி வரும் தனியார் அமைப்புகளில் குறிப்பிடத்தக்கன ஆய்வுப் பேரவை, புத்தொளி ஆராய்ச்சிக் கழகம், மனித நேய ஆராய்ச்சிக் கழகம், தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம் என்பனவாகும். இவ்வமைப்புகள் சென்னை நகரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்றன.

## 5.4 கருத்தரங்கம், பயிலரங்கம்

### கருத்தரங்கம், பயிலரங்கம்

மாணவர்களிடையே தமிழ்க்கல்வியை வளர்க்கவும், ஆர்வத்தை தூண்டவும் கருத்தரங்கம் மற்றும் பயிலரங்கம் வைப்பது இன்றியமையாததாக திகழ்கிறது. மாணவர்களின் திறன்களையும் திறமைகளையும் வெளிக்கொணர முடிகிறது. இதனால் புதியன படைக்கும் சிந்தனை ஆற்றல் வளர்கிறது.

### 5.4.1 கருத்தரங்கம்

கருத்தரங்க கற்பித்தல் முறை என்பது உயர்கற்றலுக்கான கற்பித்தல் உத்தியாகும். மனித இடைவினையுடைய உளவியல் கற்பித்தல் கொள்கைகளை அடிப்படையாக கொண்ட கற்பித்தல் முறைகளில் ஒன்றாக திகழ்கிறது.

"கருத்தரங்கில் குறிப்பிட்ட கருத்தில் கட்டுரை வழங்கப்பட்டு அதிலுள்ள ணிக்கலான கருத்துகளுக்கு குழு விவாதம் மூலம் திர்வு காணப்படும்" என்று சி.என்.ராஜா மற்றும் டி.பி.ராவ் (2004) கூறியுள்ளனர்.

கருத்தரங்கம் ஒரு முறைப்படுத்தப்பட்ட குழு விவாதத்திற்கு முன்னரோ பின்னரோ ஒரு முறையான விரிவுரை நிகழ்த்தப்படும் என்று **சி.ஜே.குமார்** மற்றும் **டி.பி.ராவ்** (2004) கருத்தரங்கத்தினை வரையறை செய்துள்ளனர்.

- **கருத்தரங்க வகைகள்**

கருத்தரங்க வகைகளை இணையத்தளத்தில் நான்கு வகையாக பிரித்துள்ளனர்.

1. சிறு கருத்தரங்கம்
2. பெரிய கருத்தரங்கம்
3. தேசிய கருத்தரங்கம்
4. பன்னாட்டுக் கருத்தரங்கம்

### சிறு கருத்தரங்கம்

வகுப்பறையில் ஒரு சிறு பாடத்தலைப்பை விவாதம் செய்ய நடத்தப்படும் கருத்தரங்கம். ஒரு நிறுவனத்தில் பெரிய கருத்தரங்கம் நடத்தபடுவதற்கு முன் சிறு கருத்தரங்கம் நடத்தப்படல் வேண்டும்.

### பெரிய கருத்தரங்கம்

ஒரு முதன்மை கருத்தில் துறை அல்லது நிறுவன சார்பில் நடத்தப்படும் கருத்தரங்கம். பெரிய கருத்தரங்கம் துறை நிலையில் வாரம் அல்லது மாதம் ஒரு முறை நடத்தப்படும். இதில் ஒரு குறிப்பிட்ட கருத்து பொதுவாக தேர்வு செய்யப்படுகிறது.

### தேசிய கருத்தரங்கம்

ஒரு நிறுவனம் அல்லது ஒரு அமைப்பினால் தேசிய அளவில் நடத்தப்படுவது. கருத்தரங்கின் மையக்கருத்தில் புலமைப்பெற்ற வல்லுனர்கள் அழைக்கப்படுகிறார்கள்.கருத்தரங்கின் கால அட்டவணை, கருத்து மற்றும் இடத்தை கருத்தரங்கின் செயலர் தயாரிக்கிறார்.

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

ஒரு பன்னாட்டு அமைப்பினால் பொதுவாக நடத்தப்படும் கருத்தரங்கம். உலகநாடுகளில் உள்ள ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் அல்லது பல்கலைக்கழகம் நடத்தப்படுவது பன்னாட்டுக் கருத்தரங்கமாகும்.

- **கருத்தரங்கக் குழு உறுப்பினர்கள்**

கருத்தரங்கம் நடத்தப்படும். குழு உறுப்பினர்கள் பின்வருமாறு அமைந்திருப்பர்.

- கருத்தரங்கின் தலைவர்
- கருத்தரங்கின் அமைப்புச்செயலர்
- கருத்தரங்கின் அமர்வுத்தலைவர்
- கருத்தரங்கப் பேச்சாளர்
- கருத்தரங்கப் பங்கேற்பாளர்

- **கருத்தரங்க சிறப்பியல்புகள்**
    - அறிவுசார் புலனின் பல்வேறு திறமைகள் வளர்க்கப்படுகிறது.
    - உளம் சார்ந்த பண்புகளை பங்கேற்பாளர்களிடத்தில் ஏற்படுத்த வழிவகுக்கிறது.
    - கருத்தரங்கக்குழு நடத்தை வழிமுறைகளை பங்கேற்பாளர்களிடம் வளர்க்கிறது.
    - கருத்தரங்க முறையில் தானே கற்றல் இடம் பெறுவதால் கற்றல் தொடர்ந்து நிலைத்து நிற்கிறது.
    - மேன்மையான கற்பித்தல் மதிப்பை பெற்றுள்ளது.

- **கருத்தரங்க முக்கியத்துவம்**

கருத்தரங்கு என்ற சொல் ஆராய்ச்சிப் பேச்சை விவரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது, இது பெரும்பாலும் வருகை தரும் ஆராய்ச்சியாளர் மற்றும் முதன்மையாக கல்வியாளர்கள், ஆராய்ச்சி ஊழியர்கள் மற்றும் முதுகலை மாணவர்களால் வழங்கப்படும். கருத்தரங்குகள் பெரும்பாலும் வழக்கமான தொடர்களில் நிகழ்கின்றன, ஆனால் ஒவ்வொரு கருத்தரங்கும் பொதுவாக அந்த பேச்சாளர் தேர்ந்தெடுக்கும் தலைப்பில் வெவ்வேறு பேச்சாளரால் வழங்கப்படுகிறது. இத்தகைய கருத்தரங்குகள் பொதுவாக ஒரு படிப்பின் ஒரு பகுதியாக இருக்காது, எனவே பொதுவாக எந்த மதிப்பீடு அல்லது கடனுடனும் தொடர்புபடுத்தப்படுவதில்லை.

சில ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில், கருத்தரங்கு ஒரு பெரிய விரிவுரைப் பாடமாக அமைந்துள்ளது, குறிப்பாக ஒரு புகழ்பெற்ற சிந்தனையாளரால் நடத்தப்படும் போது பார்வையாளர்களின் அளவு அல்லது கலந்துரையாடலில் மாணவர் பங்கேற்பின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

- **கருத்தரங்கு அறைகள்**

"கருத்தரங்கு அறை" என்பது ஒரு பொதுவான குழு ஆய்வு அல்லது நூலகத்தில் பணியிடத்திற்கான பெயராகப் பயன்படுத்தப்படுகிறது. [9] சில கருத்தரங்கு அறைகள் ஒரு குறிப்பிட்ட தலைப்பு, துறைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன, அதாவது ஒரு கருத்தரங்கு படிப்பு அல்லது தனிப்பட்ட சுய–ஆய்வு நிகழ்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு இடமாக திகழ்கிறது.

### 5.4.2 பயிலரங்கம்

ஒருவகைக் கற்பித்தல் வழிமுறை பயிலரங்கு

ஒரு கல்வி நிறுவனத்தில் மாணவர் அல்லது ஆசிரியர்க்கு அளிக்கக்கூடிய பயிற்சி பயிலரங்கம் எனப்படும். பிறகு அவர்கள் அப்பயிற்சியை கற்றுத்தேர்ந்தவுடன் சான்றிதழ் வழங்க வேண்டும். சான்றாக, கணினிப் பயன்பாடுக் குறித்த பயிற்சியை பயிலரங்கில் அளிக்கின்றபோது அதைக்குறித்த செய்முறை பயிற்சி அறிவை பயிலரங்கில் பங்கேற்பவர்களின் நடைமுறை, நுட்பங்கள் அல்லது பெற வேண்டும் ஏற்று நடத்துவது பயிலரங்கின் நோக்கமாகும்.

- **பயிலரங்க அம்சங்கள்**

பயிலரங்குகள் பெரும்பாலும் 6 முதல் 15 வரையிலான பங்கேற்பாளர்களைக் கொண்டு அமைக்கின்றன.

ஒவ்வொரு பங்கேற்பாளர்களின் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்தவும் உதவுகிறது. ஒரு துறை சார்ந்தவர்களுக்காக வடிவமைக்கப்படுகின்றது.

- **பயிலரங்கு ஒருங்கிணைப்பு**

ஒரு பயனுள்ள மற்றும் வெற்றிகரமான பயிலரங்கை நடத்துவதற்கு, அதன் திட்டமிடல், தயாரிப்பு மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் திட்டமிடும்போது, பயிலரங்கின் பார்வையாளர்கள், அதன்

அளவு, அதன் நீளம், அதன் நோக்கம் மற்றும் உங்கள் விளக்கக்காட்சி விருப்பங்களைக் கவனியுங்கள். தயாரிப்பில் தளவாடங்கள் (சம்பந்தப்பட்ட பொருட்கள், உபகரணங்கள் போன்றவற்றை நிர்வகித்தல்) மற்றும் உளவியல் ரீதியாகவும் தயார்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

குறிப்பிட்ட கல்வி நிறுவனம் குறித்து தங்களது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்ளும் முறையில் கலந்துரையாடலும் செயல்முறைப் பயிற்சியும் நடைபெறும் காலப்பகுதி பயிலரங்கு எனப்படும்.

எ.கா :

கணினியில் தமிழ் தட்டச்சு பயிற்சி, ஆசிரியர்களுக்கு அளிப்பதற்கு மூன்று நாள் அல்லது ஐந்து நாட்கள் தொடர்ந்து கணினித்தமிழ் பயிலரங்கம் ஒரு பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ கணினி ஆய்வகத்தில் முறையாக பயிற்சி அளித்து வருவது பயிலரங்கம் ஆகும். இது மட்டுமல்லாமல் புதிய கல்வி மாற்றத்திற்கு ஏற்ப ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி பயிலரங்கம் நடத்துவதால் அவர்கள் காலத்திற்கேற்ற அறிவைப் பெறுவர்.

## 5.5 வலைத்தளங்கள் (மின் அகராதி, வலைப்பூக்கள்….)

### வலைத்தளங்கள் (மின் அகராதி, வலைப்பூக்கள்….)

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பெரிதும் துணைபுரியும் வலைத்தளங்களான மின் அகராதி, வலைப்பூக்கள் முதலானவற்றை குறித்து இப்பகுதியில் காணலாம்.

### 5.5.1 மின் நூலகம்

நவீன வசதிகளும் வாய்ப்புகளுமுள்ள மின் நூலகம் தமிழ்மொழி கற்பிப்பதற்கெனவும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் இணையக் கல்விக் கழகத்திலும் சில தனியார் நிறுவனங்களிலும் தமிழ்மொழி இலக்கியம், பண்பாடு ஆகியவற்றிற்கென மின் நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- **தமிழ் இணையக் கல்விக்கழக மின் நூலகம்**

தமிழகத்தில் 1999ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற உலகத் தமிழ் இணைய மாநாட்டின் விளைவாகத் தமிழக அரசால் 2001ஆம் ஆண்டு

பிப்ரவரித் திங்களில் தொடங்கப்பட்டத் தமிழ் இணையக் கல்விகழகத்தின் மின் நூலகம், ஒரு மொழிக்கென நிறுவப்பட்ட மின் நூலகம் என்ற சிறப்புக்குரியது. மேலும், நூல்களும் மூலங்களும், தகவல்களும் மட்டுமல்லாமல் அகராதிகள், கலைச்சொல் தொகுப்புகள், தமிழ்ப் பண்பாட்டுக் களங்களான கோயில்கள், கலைகள் பற்றிய பண்பாட்டுக் காட்சியகம் ஆகியவையும் இடம் பெற்றுள்ள தனித்தன்மை வாய்ந்த ஒரு மின் நூலகம் என்ற பெருமைக்குரியது.




வகுப்பிற்குச் செல்லாமலே பாடங்களைக் கற்கும் வசதியும் வாய்ப்பும் வழங்கப்படும் இணைய வழிக் கல்வியைத் தரும் தமிழ் இணையக்கல்விக்கழகத்தில் நூலகத்திற்கு வராமலேயே நூல்களைக் கற்கும் வசதியையும் வாய்ப்பையும் வழங்குகிறது மின் நூலகம்.

மின்நூலகத் திரையில் மிதவை தமிழ் விசைப்பலகை ஒன்று தோன்றும். அதில், தமிழ் எழுத்துகள் கொண்ட பொத்தான்கள் இருக்கும். தேவைப்படும்

பொத்தான்களை அழுத்தி, வேண்டிய தமிழ்ச் சொல்லை உருவாக்கலாம். அதன் வாயிலாகத் தேவையான, சொல்லுக்குரிய ஆங்கிலச் சொல்லைப் பெறலாம். இத்தகைய நவீன வசதிகள் இம் மின் நூலகத்திலுள்ளது.

தமிழ் இணையக் கல்விக்கழக நூலகத்தில், தமிழ் இலக்கண, இலக்கியங்கள், அகராதிகள், கலைச்சொல் தொகுப்புகள், பண்பாட்டுக் காட்சியகம் ஆகிய பல பிரிவுகள், தேடுதல் வசதிகளோடு அமைக்கப்பட்டுள்ளன.

சமூகவியல், வரலாறு, புவியியல், அரசியல், பொருளியல், வணிகவியல், வேதியியல், இயற்பியல், விலங்கியல், கணிதவியல், தாவரவியல், நிலவியல், புள்ளியியல், மருத்துவவியல், தகவல் தொழில் நுட்பவியல், கால்நடை மருத்துவவியல், மின்னணுவியல், வேதிப் பொறியியல், கட்டடப் பொறியியல், வேளாண்மைப் பொறியியல், உயிரிய தொழில் நுட்பவியல், மனை இயல் முதலிய பல்துறைக்குரிய கலைச் சொற்களுக்கு நிகரானத் தமிழ்ச் சொற்கள் அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 5.5.2 வலைப்பூக்கள் – வலைப்பதிவு

21ஆம் நூற்றாண்டு அறிவியல் வளர்ச்சியில் அசைக்கமுடியாத இடத்தைப் பெற்றிருப்பது இணையமாகும். தகவல் தொழில் நுட்ப உலகில் இணையம் மிகப்பெரிய உதவிகளை மொழி, இனம், பாராமல் உலக மக்களுக்குச் செய்து வருகின்றன. இது விஞ்ஞானம், அறிவியல், கணக்குகள் என்ற ஒரு குறிப்பிட்ட சிலவற்றிற்குப் பயன்படாமல் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி வருகின்றன. நெடிய பாரம்பரிய மிக்க தமிழ்மொழியும் இவ் இணையத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்று வளர்ந்து வருகின்றது. இணையத்தில் எண்ணிலடங்கா இலக்கிய வகைகளைப் பெற்று வளர்ந்து வரும் தமிழ் மொழிக்கு வலைப்பூக்கள் என்ற புதிய இலக்கிய வகை தோன்றிப் பெரும் பங்காற்றி வருகிறது. வலைப்பூக்கள் என்றால் என்ன ? அதன் தோற்றம், தமிழில் தோன்றிய வரலாறு மற்றும் அதன் வகைகளாக இலக்கியம் சார்ந்த வலைப்பூக்கள், பக்தி, ஆன்மீகம், கணிப்பொறி, மருத்துவம், பல்சுவைச் சார்ந்த வலைப்பூக்கள் எனப் பகுக்கப்பட்டு ஒவ்வொன்றின் தமிழ்ப் பயன்பாட்டையும் எடுத்து விளக்குகிறது.

- **வலைப்பூ – வலைப்பதிவு**

"ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணியை நேற்றைய கருவிகொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலியும். இது தவிர்க்க முடியாதது" என்று டாக்டர்

வா.செ.குழந்தைசாமி குறிப்பிடுவார். அவரின் கூற்றுபடி நாம் இன்றைய பணியை இன்றைய கருவி கொண்டு செய்யவேண்டும். அதன் அடிப்படையில் தான் நாம் இணையத்தை இன்று பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம். அதில் வலைப்பூக்கள் என்ற ஒன்று தனி இலக்கிய வகையாகத் தோன்றியுள்ளது. ஒருவரிடமிருந்து பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்க்கான எழுத்துகள், ஒலி, ஒளி வடிவக் கோப்புகள், ஓவியம், படங்கள் என்று அனைத்தையும் இணையம் வழியே தனிப்பட்ட ஒருவர் உலகில் இருக்கும் பிறருக்குத் தெரிவிக்க உதவும் இணைய வழியிலான ஒரு சேவையே வலைப்பூ என்பதாகும்.

வலைப்பூ என்பதை ஆங்கிலத்தில் பிளாக் (Blog) என்கிறார்கள். இதன் மூலம் வெப்ளாக் (Weblog) என்பதாகும். 17–12–1997ல் ஜார்ன் பெர்கர் (John Berger) என்பவர்தான் வலைப்பூவிற்கு ஆங்கிலத்தில் Webblog என்ற பெயரை உருவாக்கிப் பயன்படுத்தினார். இதன் பின்பு இதன் சுருக்க வடிவமான Blog எனும் பெயரைப் பீட்டர் மெர்ஹால்ஸ் (Peter Merholz) என்பவர் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பயன்படுத்தத் தொடங்கினார். இவரது வலைப்பதிவின் பக்கப் பட்டையில் Webblog எனும் சொல் இரண்டாக உடைக்கப்பட்டு We blog என்று பிரித்துக் கையாளத் தொடங்கினார். இப்படியே வலைப்பூவிற்கு Blog எனும் பெயர் நிலைத்து விட்டது. தமிழில் வலைப்பூ என்ற பெயரை சிமென்ட்க் (Symantec) நிறுவனத்தின் இயக்குநர் மணி.மணிவண்ணன் சூட்டியுள்ளார்.

- **தமிழ் வலைப்பூ**

இந்த blog எனும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகத் தமிழில் ஒரு பெயர் உருவாக்க விரும்பிய போது தமிழ் உலகம் ராயர் காபி கிளப் மடலாடற் குழு (மின் குழுமம்) உறுப்பினர்கள் தங்கள் கலந்துரையாடல்களின் வழியாக blog–க்கு வலைப்பூ என்று தமிழில் பெயர் உருவாக்கினார். இன்று தமிழில் இந்த வலைப்பூ என்ற பெயரே பயன்பாட்டில் இருந்து வருகிறது.

- **வலைப்பூ சேவை**

வலைப்பூ வசதிக்கான சேவையை முதன்முதலாக 1996 ஆம் ஆண்டில் எக்ஸான்யா (Xanya) எனும் நிறுவனம் வழங்கத் தொடங்கியது. 1997 ஆம் ஆண்டில் சுமார் 100 நாட்குறிப்பேடுகள் இடம் பெற்றன. அதன் பிறகு சில நிறுவனங்கள் வலைப்பூவிற்கான இலவச இடவசதியைச் செய்து கொடுத்தன. இந்நிறுவனங்களில் ஒன்று பிளாக்கர்ஸ்.காம் எனும் பெயரில் வலைப்பூ அமைப்பதற்கான சேவையை இலவசமாக அளித்து அதிகமான வலைப்பூக்களை உருவாக்க வாய்ப்பளித்தன. இதன் மூலம் ஆங்கிலத்தில் பலர் தங்களுக்கான

வலைப்பூக்களை உருவாக்கத் தொடங்கினர். இதன் வளர்ச்சியைக் கண்ட கூகுள் (Google) நிறுவனம் இந்நிறுவனத்தை விலைக்குப் பெற்றது. அதன் பிறகு அனைத்து மொழிகளிலும் வலைப்பூ அமைப்பதற்கான சேவை அளிக்கப்பட்டது.

- **முதல் தமிழ் வலைப்பூ**

தமிழ் மொழியிலான முதல் வலைப்பூவை நவன் என்கிற வலைப்பதிவர் 2003 ஆம் ஆண்டில் ஜனவரி 26ல் உருவாக்கினார் என்று அவருடைய வலைப்பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2003ஆம் ஆண்டில் ஜனவரி முதல் தேதியன்றே கார்த்திக் ராமாஸ் என்பவர் முதல் வலைப்பூவை உருவாக்கினார் என்று சிந்தா நதி எனும் இணைய இதழில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த இரு வலைப்பூக்களில் நவன் வலைப்பூ பிளாக்கர்ஸ்.காம் தளத்திலும், (www.navan.name/blog/?p=18) கார்த்திக் ராமாஸ் வலைப்பூ பிளாக்டிரைவ் எனும் தளத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கார்த்திகேயன் ராமசாமி (கார்த்திக் ராமாஸ்) எனும் வலைப்பதிவர் தமிழில் செய்த முதல் வலைப்பூ என்று பேராசிரியர் மு.இளங்கோவன் எட்டாவது தமிழ் இணைய மாநாட்டு மலரில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவிலும் கார்த்திகேயன் ராமசாமி வலைப்பூதான் முதல் தமிழ் வலைப்பூ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (karthikramas.blogdrive.archive/21.html)

### 5.5.3 தமிழ் வலைப்பூக்கள் வளர்ச்சி

தமிழ் வலைப்பூக்கள் உருவாக்கம் மற்றும் பயன்கள் குறித்த கட்டுரை ஒன்று திசைகள் எனும் இணைய இதழில் வெளியானதைத் தொடர்ந்து தமிழ் வலைப்பூக்கள் குறித்துப் பலருக்கும் தெரியத் தொடங்கின. தமிழ் வலைப்பூக்களின் தொடக்கக் காலத்தில் தமிழ் எழுத்துருப் பிரச்சனைகள் இருந்ததால் இதன் வளர்ச்சி சற்றுக்குறைவாகவே இருந்தன. 2003ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை சுமார் 1000 வலைப்பூக்கள் தோன்றியிருந்தன. அதற்கடுத்த 2005 முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இந்த எண்ணிக்கை 4000 ஆக அதிகரித்தது என்று பேராசிரியர் க.துரையரசன் எழுதிய "இணையமும் இனிய தமிழும்" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். 2007 லிருந்து 2012 வரை 15000 வலைப்பூக்கள் உருவாகியுள்ளன. 2012 முதல் இன்று வரை சுமார் 16.625 வலைப்பதிவுகள் இருப்பதாக நீச்சல்காரன் தனது இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளார். (நன்றி.Neechalkaaran.com) இந்த கணக்கு எதிர்வரும் காலங்களில் மேலும்

உயர்ந்து 50,000த்தை தொட்டுவிடும். ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 3 அன்று உலக வலைப்பதிவாளர்கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

- **தமிழ் வலைப்பூக்களின் வகைப்பாடுகளும் வளர்ச்சிகளும்**

தமிழ் வலைப்பூக்களின் உள்ளடக்கத்தைக் கொண்டு முக்கியமான சில தலைப்புகளின் கீழ் அவற்றை வகைப்படுத்தலாம். தமிழ் வலைப்பூக்களில் அதிகமாக கவிதைகளுக்கான வலைப்பூக்கள் தான் உருவாக்கியிருப்பது பல வலைப்பதிவர்கள் தங்கள் கவிதைகளை அவர்களுக்கான வலைப்பூக்களில் அதிக அளவில் வலையேற்றம் செய்து வருகிறார்கள். எடுத்துக்காட்டாக

**அ. ராமசாமி**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறைப்பேராசிரியர் முனைவர்.அ.ராமசாமி அவர்களால் ஒரு வலைப்பூ 2007 ஆம் ஆண்டு முதல் தொடங்கி வெளியிடப்பட்டு வருகிறது. இதில் 300 இடுகைகள் வரை இடம் பெற்றுள்ளன. இவர் நாள்தோறும் புதிய புதிய இடுகைகளைப் பதிவேற்றம் செய்த வண்ணம் உள்ளார். இவரது கட்டுரைகள் இலக்கியத்தரம் வாய்ந்ததும், தெளிந்த நடையுடையதுமாக அமைந்துள்ளன. முற்போக்குச் சிந்தனையை உடைய திறனாய்வுக் கட்டுரைகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. இதுவரை இவரது வலைப்பூவை 31875 பேர் பார்வையிட்டுள்ளனர். தரமான விமர்சனத்தையும் முன் வைத்துள்ளனர் (http://ramasamywritings.blogspot.in)

**தொழில்நுட்ப வலைப்பூ**

இணையப் பயன்பாட்டில் அதிகமாகப் பங்கு கொள்ளும் கணினிக்கான தொழில்நுட்பப் பணியிலிருக்கும் பலர் கணினி தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் விதமாக உருவாக்கிய பல தமிழ் வலைப்பூக்கள் இருக்கின்றன. அவைகளில் ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட இவ்வலைப்பூவில் தமிழில் கணிப்பொறியை எவ்வாறு இயக்குவது, தமிழ் மென்பொருட்களின் பட்டியல்கள் என பல தகவல்கள் அடங்கிய கட்டுரைகள் உள்ளன. கணினி இணையம் பற்றிய சில செய்திகளும் இந்த வலைப்பூவில் தரப்பட்டுள்ளன. (www.tamiltools.blogspot.com)

### பெண்கள் சார்ந்த வலைப்பூக்கள்

பெண் உடல் நலம், பெண்களுக்கான சுதந்திரம், வேலைவாய்ப்புகள் போன்ற ஒரு சில பெண்களுக்கான சிறந்த வலைப்பூக்களும் தமிழில் உருவாகியிருக்கின்றன. இது பாடினியார் என்ற பெயரில் ஜெயந்தி என்பவரால் உருவாக்கப்பட்ட வலைப்பூ ஆகும். இவர் அக்டோபர் 2009 ஆம் ஆண்டு தொடங்கியுள்ளார். (http://paadiniyar.blogspot.com) திருமதி.சந்திரவதனம் என்பவர் ஜீலை 2003 ஆம் ஆண்டு பெண்கள் என்ற பெயரில் ஒரு வலைப்பூவைத் தொடங்கி பெண்கள் பற்றிய அரிய செய்திகளைப் பதிவு செய்து வருகிறார். (http://pennkal.blogspot.in/). இவைகள் மட்டுமின்றி ஆன்மீகம், அறிவியல் மருத்துவம் சார்ந்த வலைப்பதிவுகளும் இணையத்தில் இடம்பெற்றுள்ளன என்று இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள் என்ற நூலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

- **தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்**
  - வலைப்பூக்களின் வருகையால் தமிழ் இலக்கியங்கள் வெளியுலக மக்களுக்குத் தெரிய வருகின்றன.
  - இணையத்தில் தமிழில் எழுதுபவர்கள் பெருகியுள்ளனர். இதனால் தமிழின் நிலை வளர்ச்சி அடைந்துள்ளது.
  - வலைப்பூக்களால் உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழ் மக்களின் கருத்துக்கள் மிக விரைவாகக் கிடைக்கின்றன.
  - இலங்கை, மலேசியா, கனடா, தென்கொரியா, சிங்கப்பூர், அரபு நாடுகள் போன்றவற்றில் வாழும் மக்களின் படைப்புகள் தமிழ்மொழியில் இருப்பதால் அனைவரும் கருத்தைப் பகிர்ந்து கொள்ள முடிகின்றன.
  - தமிழ் மொழியின் இலக்கண, இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் முதல்கொண்டு இக்கால இலக்கியங்கள் வரை வலைப்பூவில் உலக தமிழர்களுக்குக் கிடைக்கின்றன. இதனால் தமிழ் மொழி வளர்ச்சி பெற்று வருகிறது.
  - இவைகள் அன்றி கணிப்பொறி சார்ந்த தகவல்கள் அதிகம் கிடைக்கின்றன. அறிவியல், விஞ்ஞானக் கருத்துக்களும் அது தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளும் நமக்கு உடனடியாகக் கிடைக்கின்றன.
  - உலக நாடுகளில் உள்ள சைவ மடாலயங்களும், திருத்தலங்களும் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.
  - தமிழ் ஆய்வுக்கட்டுரைகள் அதிகம் வலைப்பூக்களில் வெளிவருகின்றன.
  - வலைப்பூக்களினால் தொழில் நுட்ப வளர்ச்சி பெற்றுத் தமிழ்மொழி வளர்ந்து வருகின்றன.
  - வலைப்பூக்களில் வெளிவரும் படைப்புகளும் கட்டுரைகளும் கவிதைகளும் பிற கருத்துக்களுக்கும் உடனுக்குடன் பின்னூட்டம் என்ற

பெயரில் விமர்சனங்கள் பல நாடுகளிலிருந்து எழுதுகின்றார்கள். இது தமிழ் மொழிக்குக் கிடைத்த விமர்சன இலக்கியம் என்றே கூறலாம். மேலும் பல துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்களும் தமிழ் மொழிக்குத் தன்னால் இயன்ற பணிகளையும் செய்து வருகின்றார்கள்.

- பிப்ரவரி 2018லிருந்து கூகுள் நிறுவனம் தமிழ் பிளாக்கர்ஸ்க்கு விளம்பர உதவியை வழங்கியுள்ளது என்பது சிறப்பான தகவலாகும்.

## 5.6 தொகுப்புரை

### தொகுப்புரை

மொழிக்கற்றலில் மாணவர்களுக்கு உறுதுணையாக விளங்குகின்றன வளமூலங்கள் பலவகையாக கருதப்படுகின்றன. அம்மொழி வளக்கூறுகளைப் பற்றி தொடக்க வகுப்புகளில் சிலவற்றை மட்டும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன. சொல் நிலையிலும் மொழி நிலையிலும் பல்வேறு கூறுகள் இடம்பெற்றுள்ளன. நிகண்டுகள், அகராதிகள், கலைக்களஞ்சியம் ஆகியன சொற்களஞ்சியத்தை வளர்கின்ற மிகச்சிறந்தப் பெட்டகமாகத் திகழ்கிறது. மொழித்திறனைப் பயன்படுத்தி தமிழ்க் கற்பிப்பதற்கான இலக்கிய, இலக்கண நூல்கள் பார்வைநூல்களாக உறுதுணைப்புரிந்தன. இலக்கிய திறனாய்வு குறித்த விழிப்புணர்வும் மாணவர்கள் பொதுவாக அறிந்து கொள்ளக் கூடிய கட்டுரைத் தகவல்களும் விளக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வி நிறுவனத்தில் கருத்தரங்கம், பயிலரங்கம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதற்கான உத்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைய தகவல்தொழில்நுட்பக் காலக்கட்டத்தில் கையடக்கத்தில் சொற்களஞ்சியப் பெருக்கத்தை வளர்த்துக்கொள்ளவும் அறிந்துகொள்ளவும் இணைய வலைத்தளப்பூக்கள் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
|---|
| 1. திறனாய்வு நூல்கள் குறித்து எழுதுக. |
| 2. கருத்தரங்கம் என்றால் என்ன? |
| 3. பயிலரங்கம் பற்றி விரிவாக எழுதுக. |
| 4. வலைத்தளங்கள் குறித்து விளக்கி கூறுக. |
| 5. மின் அகராதி பயன்பாட்டை விவரிக்க. |
| 6. மின் நூலகப் பயன்பாட்டை விளக்குக. |
| 7. தமிழ் வளர்ச்சிக்கு வலைப்பூக்கள் ஆற்றும் பங்கினை விவரிக்க. |

## பார்வை நூல்கள்

1. **படைப்பாற்றல் திறனை வளர்ப்பது எப்படி?** – பசுமைக் குமார், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. **நற்றமிழ் கற்பிக்கும் முறைகள்** – பேரா.வி.கணபதி, சாந்தா பப்ளிஷர்ஸ்.
3. **தமிழ் கற்பித்தல்**(பகுதி – 1 கற்பிக்கும் முறைகள்), – தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், 2016–2017.
4. **தமிழ் கற்பித்தல்** – தொலைநிலைக் கல்வி இயக்ககம், அழகப்பா பல்கலைக்கழகம்.
5. **தமிழ்மொழி கற்பித்தல்** – முதலாமாண்டு, ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.
6. **தமிழ்மொழி கற்பித்தல்** – இரண்டாமாண்டு, ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.
7. **தமிழ் கற்பித்தல் முறைகள்** – முதலாமாண்டு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், 2015–2016.
8. **கல்வி உளவியல்** – எஸ்.சந்தானம், வி.கணபதி, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, 2019.
9. **கல்வி உளவியல்** – ந.சுப்புரெட்சியார், வாசன் கம்பெனி, சென்னை, 1961.
10. **கல்வி உளவியல்** – Dr. AR. சரவணகுமார், சான்லாக்ஸ் பதிப்பகம், 2019
11. **கற்கும் குழந்தை (வளநூல்)** – முதலாமாண்டு, ஆரிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை. 2008.
12. **தமிழ் கற்பிக்கும் முறைகள்** – புலவர்.சரவண. ஆறுமுகமுதலியார், எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, நுங்கம்பாக்கம், 1958.
13. **தாய்மொழிக் கல்வியும் கற்பித்தலும்** – கலாநிதி.சபா. ஜெயராசா, டெக்னோ பிரிண்டர்ஸ், கொழும்பு, 2007.
14. **கற்றலும் கற்பித்தலும்** – இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு(முதலாமாண்டு) தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை, 2016–2017.
15. **மொழித் திறன்களும் கற்றல் கற்பித்தலில் தொழில் நுட்பமும்** – கு.முனீஸ்வரன்(பதிப்பாசிரியர்), புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகம், மலேசியா, 2017 .
16. **தமிழ் கற்க கற்பிக்க** – முனைவர் இரத்தினசபாபதி, அம்சா பதிப்பகம், சென்னை, 2000.